

கடலூர் கிழக்கு மாவட்டம், கடலூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்,நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம், நடுவீரப்பட்டு மந்தைவெளி பேருந்து நிலையம் அருகில், ஒன்றிய கழக செயலாளர் டி.காசிராஜன் தலைமையில் நடைப்பெற்றது. மாவட்டப் பிரதிநிதி ஆர்.ஞானசேகரன் வரவேற்புரையாற்றினார். வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். தலைமைக் கழக பேச்சாளர் முத்துப்பாண்டி, மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, ஒன்றிய கழக செயலாளர் ஆர்.விஜயசுந்தரம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன், பகுதி செயலாளர் எஸ்.பி.நடராஜன், வழக்கறிஞர் அணி பி.அருள்ஜோதி உள்ளிட்ட ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள்,சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அனைவரையும் ஒன்று போல் கருதி

# அன்புடன் சிகிச்சை தரும் செவிலியர்களுக்கு வாழ்த்துக்கள்!

## உலக செவிலியர் தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துக்கள்!

சென்னை, மே 13 –

அனைவரையும் ஒன்று போல் கருதி அன்புடன் சிகிச்சை தரும் செவிலியர்கள் அனைவர்க்கும் நல்வாழ்த்துக்கள் என்று உலக செவிலியர் தினத்தை யொட்டி வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

உலக செவிலியர் நாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:

**தன் எதிரில் உள்ள மனிதரின் பாலினம், சமூகத் தகுதி, சாதி - மதம் - நிறம் என எதைப் பற்றியும் சிந்திக்காமல் அனைவரையும் ஒன்றுபோலக் கருதி, அன்புடன் சிகிச்சை வழங்கி ஆதரிக்கும் தூய உள்ளங்களான செவிலியர்கள் அனைவருக்கும் உலக செவிலியர் நாள் வாழ்த்துகள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### மும்பை தி.மு.க. சார்பில்

# பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா!

## பொறுப்புக்குழு தலைவர் ம.சேசுராசு தலைமையில் நடைபெற்றது!

மும்பை, மே 13 –

மும்பை திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் திராவிட கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனார் அவர்களின் 134வது பிறந்தநாள் விழா மற்றும் அவரது பிறந்த நாளை உலக தமிழ் வாரமாக அறிவித்த மாநில சுயாட்சி நாயகர், நமது உரிமையினை மாநிலங்களுக்கு உச்ச நீதிம ன்றத்தின் மூலம் போராடிப் பெற்றுத் தந்த கழகத் தலைவருக்கு நன்றி பாராட்டும் விழா 11.05.2025 ஞாயிறு இரவு 7 மணிக்கு மும்பை தி.மு.க. பொறுப்புக்குழு தலைவர் ம.சேசுராசு தலைமையில் தாராவியில் உள்ள கலைஞர் மாளிகையில் நடைபெற்றது.

பொறுப்புக்குழு உறுப்பினர் ம.நீதிதுரை வரவேற்புரையாற்றினார்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் க.மு.மாணிக்கம், அன்பழகன் பொற்கோ, ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

பாவேந்தர் பாரதிதாசனார் படத்தை பம்பாய் திருவள்ளுவர் மன்றம் மற்றும் கலைஞர் தமிழ்ச் சங்கம் செயலாளர் ஜேம்ஸ் தேவதாசன் திறந்து வைத்தார்.

மும்பை திராவிடர் கழக தலைவர் பெ.கணேசன், மராத்திய மாநில விசிக அமைப்புச் செயலாளர் சாலமோன் ராசா, மும்பை பகுத்தறிவாளர் கழகம் தலைவர் அ.ரவிச்சந்திரன் மற்றும் ஆ.பாலசுப்பிரமணியன், இரா.மதியழகன், எஸ்.பி.செழியன், பேலஸ்துரை, அப்துல் திவான் மைதீன், வே.ரவிச்சந்திரன் சேரை ச.பிரகாஸ், எம்.ராஜன் (Rdo), சுப.காளிமுத்து, அ.கண்ணன், சங்கர் திராவிட், பொய்சர் க.மூர்த்தி, பி.எஸ்.அழகுராஜா, கிருஸ்ண மூர்த்தி, பெருமாள், செல்வி க.அறிவுமதி,செந்தமிழரசி, அறிவுமலர் ஆகியோர் உரையாற்றினார்கள்.

மும்பை இலெமுரியா அறக்கட்டளை தலைவர் சு.குமணராசன் சிறப்புரையாற்றினார்.

தாராவி தி.மு.க. பிரமுகர் ஆர்.ரவிரஜினி நன்றி கூறினார்.



# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், இளைஞர் அணி மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து, கீழ்காணும் சட்டமன்றத் தொகுதிகளில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. அதன் விவரம் வருமாறு:

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 15.05.2025 | திண்டுக்கல் கிழக்கு | ஆத்தூர் | அகரம் தாடிக்கொம்பு பேரூராட்சி | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, செல்வக்குமார் |
| 2 | 16.05.2025 | திண்டுக்கல் மேற்கு | ஒட்டன்சத்திரம் | கள்ளிமந்தையம் | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, மில்லர் மண்டேலா |
| 3 | 17.05.2025 | வேலூர் | வேலூர் | அண்ணா கலையரங்கம் அருகில் | வழக்கறிஞர் தாயகம் கவி, ரிஷி சந்தோஷ் |
| 4 | 18.05.2025 | வேலூர் | குடியாத்தம் | பேரணாம்பட்டு பேருந்து நிலையம் அருகில் | மாண்புமிகு கோவி.செழியன், ம.ஜ.சந்தீப் |
| 5 | 18.05.2025 | நீலகிரி | உதகை | கூக்கல்தொரை | மருத்துவர் ப.மீ.யாழினி, சி.கா.சுகன்மந்த்ரன் |

### ஒன்றிய–நகர–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

இராமநாதபுரம் மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 15.05.2025 வியாழக்கிழமை | காலை 10.00 மணி | இராமநாதபுரம் | பீமாஸ் வைஸ்ராய் ஹால், பாரதி நகர், இராமநாதபுரம். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 12-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


